# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

## Calender Case No.01 of 2024

**Deposition of witness for** : **Pw15**

**Name** : **சாமிநாதன்**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் கடந்த பிப்ரவரி மாதம் 28.02.2025 தேதி ஒசூர் உட்கோட்டம் சிப்காட் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் ஆய்வாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 06.05.2022 ம் தேதி மாலை 12 மணிக்கு நிலையப் பணியில்இருக்கும்போது காவல் உதவி ஆய்வாளராக காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனையில் வேலம்பட்டி கிராமத்தை சார்ந்தவர் கருணாநிதி மற்றும்அவரது மனைவி ராஜேஸ்வரி மற்றும் ராணி , முனியம்மாள் ஆகியோரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னதின் பேரில் நான் காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சென்று ராஜேஸ்வரி மற்றும் ராணி , முனியம்மாள் மூவரும் சிகிச்சையில்இருந்தார்கள். முனியம்மாள் முதல் உதவி

சிகிச்சை பெற்று கொண்டு மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாக தகவல் தெரிந்தும், பிறகு சிகிச்சையில் இருந்த ராஜேஸ்வரி மற்றும் ராணி , கருணாநிதி ஆகிய மூவரையும் விசாரித்து ராஜேஸ்வரி கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அவரிடம் கையொப்பம் பெற்று நிலையம் வந்து மேல் நடவடிக்கைக்காக காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனைக்கும் நாகரசம்பட்டி மருத்துவமனைக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு என்றால் 13 கி.மீ இருக்கும். எனக்கு தகவல் தெரிந்தும் எத்தனை மணிக்கு காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சம்பவம் நடந்து 1 மணி நேரத்தில் சென்றேன். நான் புகார் பெற்றது எங்களுடைய காவல் நிலைய எல்லைக்குள் வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடந்த இடம் நாகரசம்பட்டி காவல் நிலைய எல்லைக்குள் குறிப்பாக வரவில்லை என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலைய எல்லைக்குள் தான் நடந்தது. சம்பவம் நடந்த காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனையும் காவேரி பட்டிணம் காவல் நிலையமும் ஒரே இடத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மற்றொரு வழக்கில் இருந்து தப்பித்தற்காக கேட்டுக்கொண்டதன் பேரில் உயர் அதிகாரிகளின் கேட்டுக்கொண்டதன் பேரிலும், ஒரு பொய்யான வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகாருக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.